## சீன மானிய உதவிச் செயற்திட்டம் - 2012

### 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டு பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்

(ஈ) மானிய உதவி உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2. நிதிக் கூற்றுக்கள்

#### 2.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின்படி, மீளாய்வாண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 1,349,990 ஆனதுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 151,110,295 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம் முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு பின்வரும் கூற்றில் காட்டப்படுகின்றது.

| செலவின வகை | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட |
|---|---|---|

| | செலவினம் | | செலவினம் |
|---|---|---|---|
| | 2012 | 2011 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | (21,159)* | (102,460) | 641,338 |
| நடைபெறும் வேலைகள் | 1,371,149 | 35,989,485 | 150,468,957 |
| | 1,349,990 | 35,887,079 | 151,110,295 |

* மீளாய்வாண்டின் போது சொத்துக்களின் பெறுமானத்தேய்வு ரூபா 21,159 ஆக இருந்தது.

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க பிரதான மதிப்பீட்டாளரிடமிருந்து வாடகை மதிப்பீட்டைப் பெற்றுக்கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது செயற்திட்ட அலுவலகம் அமைநதுள்ள கட்டிடத்திற்கான வாடகையாக ரூபா 360,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கேள்வி வழிகாட்டலின் 8.13.4 ஆம் பிரிவின்படி, மேலதிக வேலைகளிற்கான காரணங்கள் தொடர்புபட்ட தரப்பினரால் விளக்கமளிக்கப்பட்டிருக்க வெண்டும். எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட வேண்டுகையுடன் இணங்காமல் ரூபா 3,025,266 ஆன தொகை மேலதிக வேலைகளிற்காக செலுத்தப்பட்டிருந்தது.

## 4. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 நிதிகளின் பயன்பாடு

சீன மக்கள் குடியரசு அரசாங்கம் மற்றும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்குமிடையே 2005 ஆகஸ்ட் 30 இல் கைசாத்திட்ட உடன்படிக்கையின்படி ரூபா 720 மில்லியன் தொகை சீன மக்கள் குடியரசு அரசாங்கத்தால் வழங்கப்பட்டு நேரடியாக கையாளப்பட்டிருந்தது. அரசாங்க பங்களிப்பின் அடிப்படையில் கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்தன.

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு கீழே காட்டப்பட்டுள்ளது.

ரூபா

| | |
|---|---|
| 2012 சனவரி 01 இல் உள்ளவாறு அரசாங்க பங்களிப்பு | 151,388,789 |
| 2012 ஆம் ஆண்டின் போது பெறப்பட்ட நிதிகள் | 517,015 |
| சீன ஒப்பந்தகாரரால் மீள்நிதியிடப்பட்ட சுங்கத்தீர்வை | (795,509) |
| 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க பங்களிப்பு | 151,110,295 |

## 4.2 பௌதீக செயலாற்றல்

செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட தகவல்களின்படி, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் பௌதீக செயலாற்றல் பின்வருமாறு உள்ளன.

| நடவடிக்கை | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முன்னேற்றம் | | |
|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட தொகை | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செய்யப்பட்ட உள்ளபடியான தொகை | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக முன்னேற்றம் |
| | ரூபா மில் | ரூபா மில் | |
| (அ) வெலிக்கடைச் சந்தியில் போக்குவரத்து சமிக்ஞை முறைமையை பொருத்துதல்<br>(ஆ) கிரிபத்கொடை- கடவத்தை வீதிப் பிரிவின் முன்னேற்றம் (2.3 கிமீ) | 150 | 150 | 100% |
| (ஆ) 32 எண்ணிக்கையான நுழைவு வீதிகள் மீள் சேதித்தல் | 14.6 | 10.8 | 100% |

வெலிக்கடைச் சந்தியில் போக்குவரத்து சமிக்ஞை முறைமையை பொருத்துதல் பூர்தியாக்கப்பட்டு 2009 மார்ச் மாதத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் வீதிப் பிரிவு அகலமாக்குவதற்காக முறைமை 2012 இல் அகற்றப்பட்டிருந்தது. மேலும் சமிக்ஞை கம்பங்கள் மற்றும் உப பாகங்கள் மீளாய்வாண்டு இறுதிவரை அவ்விடத்தில் மீளப் பொருத்தப்பட்டிருக்கவில்லை.